14. ப்ரதிமாதம் 5 தேதிகளுள் கடந்த மாதத்தின் வரவு செலவு கணக்குகளுக்கு பொக்கிஷதாரி ஓர் பொதுப்பொழிப்புக் கண க்கு சித்தஞ்செயத, வரவுசெலவு கணக்கு பற்றுச்சீட்டுப்புத்தகம் பாஸ் புத்தகம் முதலானவைகளை கணிகருக்களுப்பி, மீளவும் இரண் டொரு தினத்தில் அவைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

15. கணிகர் மாதவாரியில் 5 தேதியில் பொக்ஷதாரரால் தளக் கனுப்பப்படும் பொதுப்பொழிப்புக் கணக்கை, வரவுசெலவு கணக்கு பற்றுச்சீட்டுப்புத்தகம் பாஸ்புத்தகம் முதலானவைகளுடன் ஒத் திட்டுப் பரிசீலனஞ் செய்தபின் பொழிப்புக்கணக்கை மாதாந்திர ப்ர தர்சகத்தில் சேர்க்கும்படி 7 தேதிக்குள் காரியதரிசிக்கு அனுப்பி, சமூகத்தின் கணக்குப்புத்தகத்தின் ஷட்டை பொக்ஷதாரருக்குத் திருப்பிவிடவேண்டும்.

16. கணிகர், வருடவாரியில் ப்ரதி பங்குனிமாதம் 31 தேதி வரையிலும் 8 - க்ராமங்களின் வரவுசெலவு கணக்குகளுக்குப்போது ப்பொழிப்புக் கணக்கு சித்தஞ்செய்து, மஹாஸபையில் வாசிக்கும் ப்ரதர்சகத்துடன் சேர்க்கும்பொருட்டு, மறுசித்திரை 15 தேதிக் குள் காரியதரிசிக்குத் தனது கத்தாட்சிப் பத்திரிகையுடன் அனுப்பவே ண்டும். மாதவாரியிலும் வருடவாரியிலும் கணிகர் பரிசீலனஞ்செய வரும் கிர்வாஹஸபையின் எவ்விதகலக்குகளிலும் தனது கையொப்ப மிட்டிருக்கவேண்டும்.

17. காரியதரிசி, மாதவாரியில் பெற்றுவரும் பொதுப்பொழி ப்புக்கணக்கைத் தனது ப்ரதர்சகத்தில் சேர்த்து, மாதவாரியில் கூடும் கிர்வாஹஸபையில் வாசித்தவரவேண்டும். வருடவாரியில் பெற்

அவரும் வருடாந்தரம் **பொதுப்பொழுப்புக்கணக்கைத்** தான் சதாஞ்செய்யும் வருடாந்திர ட்ரதர்சனத்துடன் சேர்த்து ப்ரதி சித் திரைமாதம் முடிவதற்குமுன் கூடும் வருடோற்சவத்தில் ரம் பங் ளை முன்னிலையில் வாசித்து அச்சிட்டு ரம்மினத்தருக்குக் கொடு க்கவேண்டும்.

18. இச்சமூகத்தின் க்ராமத்தொழிலாளர்களுக்குரிர்வாஹஸபை யாரின் அபிப்ராயப்படி மாதாந்தர சம்பளமும் பிரயோஜனங்களில் **24**-வது ரிபந்தனையின்படி. அவரவர்களுக்குச் சேரவேண்டிய ஸ்வதந் த்ரமும் கொடுத்து ஸபையின் அதிகாரத்திற்குட்படுத்தி வைக்கவும், விளம்பரம் ஸபையின் வருத்தாந்தம் முதலானவைகளை ஆவசியமாகும் போது அச்சிட்டுவரவும், ரபாற்செலவு முதலானவைகளுக்கு முக்கிய மாய் மூலத்ரவ்யம் வேண்மோதலால், உள்ளூர் புறதேசவாஸிகளா கிய ரம்மினத்தரில் ஒவ்வொரு குடும்பத்தாரிடமிருந்து வருடமொன் றுக்குச் சுலபமாய் வருடவிராளம் அணு - **12.** விதம் வருடவாரியி லாவது அல்லது வருடத்தில் நான்குதடவையிலாவது மூன்னுதாய் ரம்மினத்தரது அனுகூலத்தை அநுலரித்து ப்ரதி தமிழ்வருடம் முடி வாவதற்கு முன் முழுமையும் இச்சபையின் **போக்கிஷதாரிடம்** செலுத்திவரவேண்டும்.

19. ஓர் வருடத்திற்கு மேற்பட்டு வருடவிராளம் கொடாமல் பாக்கிவைத்த திருப்பவர்களின் க்ருஹங்களில் சுபங்கள் நேரிட்டு அவர் களின் விண்ணப்பத்தின்மீது க்ராமத்தொழிலாளர்களை யனுப்புமுன், பாக்கியான வருடங்களுக்குக் கட்டவேண்டிய அணு **12** - க்குப் பதி லாக வருடமொன்றுக்கு ரூபாய். **1—0—0** விதம் கணக்கிட்டு முழு மையும் வஸூல்செய்து கொண்டபின் அவர்களுக்கு வேண்டிய உதவி களைக் கொடுத்துவரவேண்டும்.

20. இது முதல் ரம்மினக்கட்டில் காலியாகும் **பெரியதனஸ் தாநத்தைப்** பூர்த்திசெய்ய, காலியான **30** - தினத்திற்குள் நிர்வா ஹஸபையார் **8** - க்ராமத்தினரையும் கூட்டி ஓர் ப்ரதம ஹாஸபை திரட்டி, பெரியதன ஸ்தானத்தைப் பரிபாலிக்கக் கூடாவண்மையில் தெ நியிலும் குணத்திலும் பொறுமையிலும் சிறந்தவர்களாயும், ரம் வம் சஸ்தரின் ஸம்பந்தங்களின் வரன்முறை தெரிந்தவர்களா யும், விவகாரங்களின் உண்மையை ஸூக்ஷ்மமாய் பரிசோதித்துகொள்ளும் ஸாமர்த்திய முள்ளவர்களாயும், தாக்ஷண்யத்தையும் ஸ்வப்ரயோஜ

கத்தையும் விட்டு ஒன்பைசாவான பொதுநோக்குவிருக்கும் 40 - வய துக்கு மேற்பட்டவர்களுள் 6 - பெயர்களை அதிகப்படாமல் மஹா பையார் நிச்சயித்துக் கொள்ளவேண்டும். இவ்வாறு நிச்சயித்துக் கொண்டவர்களின் நாமதேயங்களை மறுதினம் விளம்பரமூலமாய் ப்ரகடனஞ் செய்து சபையினத்தார் யாவருக்குந் தெரிவிக்கவேண்டும்.

21. மேற்சொல்லிய விளம்பரத்தில் ப்ரகடித்த 14 - தினத்திற் குள் ஓர்தினம் உத்தேசித்து, மேற் கூறியபடியே 8 - க்ராமத்தினரையும் கூட்டி இரண்டாவது மஹாஸபை சேர்த்து, மேற்கண்ட அறுவர் விஷயமாய் சபையினத்தாரால் கொடுக்கப்படும் அபிப்ராயச் சீட்டுகளை ஓர் பெட்டியில் (ஸபைகூடிய காலம்முதல் பூர்த்தியாய் 6-மணி நேரம் வரையிலும்) திரட்டி, அதற்குப்பின் ஸபையார் முன்னிலையில் அச்சீட்டுகளைக் கணக்கிட்டு, இருவர் பக்ஷத்திலும் ஒரேலக்கமாய் நிற்கும் பக்ஷத்தில் **லபாதாயகர்** இரண்டாவது அபிப்ராயச் சீட்டைக் கொடுத்து மறுபடியும் அவைகளைக் கணக்கிட்டு, அதிகலக்கியையைப் பெறுமவர்களுக்கு உடனே அச்சபையில் மாலை மரியாதை நடத்தி, அவனை அன்றுமுதல் நம் ஸமுதாயப் **பெரியதனத்தர்** என அங்கீகரித்து, மறுநாள் இக்ரியமுதத்தை விளம்பரமூலமாய் நம்மினத்தர்களை யாவருக்கும் ப்ரஸித்தஞ் செய்யவேண்டும். பெரியதனஸ்தானம் காலியாகும் தேதிமுதல் பூர்த்தியாகு மளவும் நிர்வாஹஸபையின் காரியதரிசியே பெரியதனஸ்தானத்திற்குரிய அலுவல்களைப் பரிபாலித்து வரவேண்டும்.

22. **க்ராமத்தலைவர்களில்** காலிநேரிட்டால், மேல் விவரித்த வாறே க்ராமத்தலைவர்களையும் நியமித்துக் கொள்ளவேண்டும். ஆனால், எத்தக்ராமத்தில் க்ராமத்தலைவர் நியமிக்கப் படுகின்றனரோ அத்த க்ராமத்தினர் மாத்திரம் ஏகோபித்து இரண்டு ஸபைகளிட்டு அவர்களுள் அபிப்ராயச்சீட்டுகள் திரட்டி க்ராமத்தலைவனை நியமித்துக் கொண்டு, இது விஷயமாய்ப் பிறக்கும் வர்த்தமானத்தின் ப்ரதி ஒன்றை நிர்வாஹஸபையார் அனுகூலத்திற் கனுப்பி க்ராமநியமநஸ்தாதநம் ஒன்றை பெற்றுக்கொள்ளவேண்டும்.

23. நம்வரம்பிற்குள்ளாகவோ இல்லங்களில் கூடுக்கும் சுபாசுபங்களுக்கு வேண்டிய க்ராமத் தொழிலாளர்கள் நிர்வாஹஸபையாரின் அதிகாரத்திற் குட்பட்டிருப்பதனாலும், இவர்கள் உதவிகளைக் கோரும் நிர்வாஹஸபையார் முதல் மற்றையாவரும் A ஸமூஹவைப்

பெற்று 24-வது நி[illegible]ஜேயிற்கண்ட அவ்வவ் டாயோஜனத்திகளுக்கு [illegible]ணயித்த விவாஹசுல்கம் வேத்ரதான்கூலி ஸ்வதந்த்ரம் இவற்று டன் காரியத்தரிவின் மூலமாய் வெளியதத்துக் கனுப்பி, தங்களு க்கு வேண்டிய க்ராமத்தோழுலாளர்களைப் பெரியதனத்தர் மூகே பெற்றுக்கொள்ள வேண்டும்.

24. நம்மினக்கட்டைசார்ந்த பெரியதனத்தர் க்ராமத்தலை வர்கள் உட்பட நீர்வாஹஸபையார் முதல் மற்றுமுள்ள நம் வம்சஸ் தர்களின் இல்லங்களில் நடத்தப்படும் சுபாசுபங்களில் கட்டாயமாய பெரியதனத்தரிடமும் க்ராமத்தலைவர்களிடமும் சேர்ப்பிக்கவேண்டிய விவாஹசுல்கம் வேத்ரதான்கூலி ஸ்வதந்த்ரம் இவற்றினுடையவும், கட்டணம் வருடவிராளம் முதலியவைகளி னுடையவும் நிர்ணயங்க ளாவன:—

| க்ராமம். | விவரம். | தொகை. | |
|---|---|---|---|
| | சுபங்களில். | ரூ. | அ. |
| பெரியதனத்தர் | விவாஹமஹோத்ஸவம் நடத்தும் இல் லத்தார் பெரியதனத்தரிடம் செலு த்தவேண்டிய விவாஹசுல்கம் ... | 1 | 0 |
| புரோகிதர் | விவாஹம் | 1 | 0 |
| | ஹோமசாந்தி } ஸ்வதந்த்ர விதம். | 0 | 8 |
| | வீமந்தம் | 0 | 4 |
| மாணிக்கத்தாள் | விவாஹம் | 0 | 8 |
| | ஹோமசாந்தி } காலொன்றுக்கு | 0 | 4 |
| | வீமந்தம் } ஸ்வதந்த்ர விதம். | 0 | 4 |
| வேத்ரதாள் (சலவாதி) | சென்கூ[illegible]ரில் எல்லைக்குள் உள்ளும் குலஸ்தர்களாயுள்ளவருக்கும் கொண்டும் ஒவ்வொரு [illegible]வைக்கும் செலுத்த வேண்டிய ... ...கூலி ரூபாய் 1-4 ஸ்வதந்த்ரம் ... ... ,, 0-8 | 1 | 12 |
| நாவிதச் | இவனுக்குரிய ஸ்வதந்த்ரம் ... ... | 0 | 4 |

| க்ராமம். | விவரம். | | தொகை. | |
|---|---|---|---|---|
| | **அநுபங்களில்.** | | ரூ. | அ. |
| புரோகிதர் | சஞ்சயணம் | ஸ்வதந்த்ர விதம். | 0 | 2 |
| | சபஸ்வீகரணம், | | 0 | 2 |
| மாணிக்கத்தாள் | மரணம் | ஸ்வதந்த்ர விதம். | 0 | 8 |
| | கருமாதி | | 0 | 8 |
| வேத்தாதரன் | சென்னை முன்ஸிபாலு எல்லைக்குள் நம் குலஸ்தர் யாவருக்கும் சொல்லும் ஒவ்வொரு தடவைக்கும் செலுத்த வேண்டிய கூலி ... ரூபாய் 1 - 4 | | | |
| | ஸ்வதந்த்ரம் ... ... ,, | 0 - 8 | 1 | 12 |
| நாவிதன் | இவனுக்குரிய ஸ்வதந்த்ரம் ... ... | | 0 | 4 |
| தாசரி | மரணத்திற்கும், ஸஞ்சயனத் திற்கும் ஸ்வதந்த்ரம் ... ... ... | | 0 | 8 |

**பொதுக்கட்டணங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| குலஸ்தர்கள் | ஒவ்வொரு குடும்பத்தரும் 18-வது நிபந்தனையின்படி நிர்வாஹ ஸபைக்குச் செலுத்தவேண்டிய வருட விராளம். | 0 | 12 |
| | விண்ணப்பத்தின்மீது 37-வது நிபந்தனையின்படி விசேஷமஹாஸபை கூட்ட. | 3 | 0 |
| | அவரவர்கள் இல்லங்களில் நடக்கும் ப்ரஹ்மோபதேசஸ்தானங்களில் அப்போதைக்கப்போது [illegible] செலுத்துவதும் பலவகையானதில் ஒவ்வொன்றை நிர்மாணித்தும் காணிக்கை பெரியதனத்தர் மூலமாக நிர்வாஹ ஸபைக்குச் செலுத்திவிடவேண்டும். | | |

குறிப்பு.—சென்னை முன்ஸிபால் எல்லைக்கு உட்பட்ட க்ராம நிவாஸிகளுக்குச் சொல்ல விரும்புவோர், அப்போதைக்கப்போது வேத்தாதரனிடம் தக்கபடி கூலி நிர்ணயித்துக்கொள்ள வேண்டும்.

25. யதுவம்சஸ்தருக்கு க்ராமத்தில் **புரோகிதர்** வைஷ்ணவராயிருக்கவேண்டும். இவர் க்ராமத்திலுள்ள யதுவம்சஸ்தருக்கு வாரத்திற் இரண்டுமுறை பஞ்சாங்கம் சொல்லிவரவேண்டும். நம்மில்லங்களில் கோடும் ப்ரதி ப்ரயோஜநம் முதலிய யாவத காரியங்களையும் காலத்திலே முன்படி இவர் பூர்த்தீகரிதரை செய்யவேண்டும். இவர் நம்வம்சஸ்தர்களின் வசதிகளில் கோடும் ப்ரதி ப்ரயோஜநங்களுக்குப் **பெரியதனத்தர்** உத்தரவின்றி கிட்டவிருந்து காரியங்களை வழுவில்லாது நடத்தினால், 24-வது நிபந்தனையில்கண்ட ஸ்வதந்த்ரம் கொடுக்கவேண்டும்.

26. யதுவம்சஸ்தர்களுக்கு **மாணிக்கத்தாள்** விஷ்ணுகோவிலாசாரத்த தாசியாயிருக்கவேண்டும். க்ராமஸ்தர்களின் வீடுகளில் நடக்கும் ப்ரயோஜநங்களுக்குப் **பெரியதனத்தர்** உத்தரவின்மீது காலப்படி போக்கவேண்டும். இவளுக்குள்ள எவ்வித அலந்தர்ப்பங்களினாலும் இதர தேவஸ்தாந தாசியையாவது அல்லது கோவில்முத்தினை பெறுதிருப்பவளையாவது தனக்குப் பதிலாயனுப்பலாகாது. இவள் போதுமான ஹேதுவின்றித் தன் குடும்பத்தாரல்லாத வேறொரு தாசியை நம் ப்ரயோஜநங்களுக் கனுப்பாமல் நடந்துகொள்வாளாயின், 24-வது நிபந்தனையின்படி ஸ்வதந்த்ரத்திற்கு உடையவளாகிறாள்.

27. க்ராம யதுவம்சஸ்தரின் **வேத்ரதான்** திருமண்தாரியாயிருக்கவேண்டும். நம் வம்ஸதர்களின் இல்லங்களில் நடக்கும் எவ்வித ப்ரயோஜநத்களுக்கும் **பெரியதனத்தர்** உத்தரவின்றி இவன் போகலாகாது. இவனுக்குத் தடுக்கக்கூடாத அலந்தர்ப்ப காலங்களில் தான் வேறொருவனைக் காரியங்களுக் கனுப்பவேண்டும். இவனுக்கு வேறெக்கே யாயினும் கூலிவேலைகள் சேர்ந்தால், அதனைச் சாக்காய்க்கொண்டு வேறொருவனை யனுப்பலாகாது. இவன் தப்பின்றி நடத்துகொள்வானில், 24-வது நிபந்தனையில் ஏற்படுத்திய ஸ்வதந்த்ரங்களுக்கு பாத்யஸ்தனாகிறான்.

28. க்ராமத் தொழிலாளர்களுக்கு **காரியதரிசி** தலைமை பூர்ண அதிகாரத்திற் குட்பட்டிருக்கவேண்டும். இவ்வூழியக்காரர்கள் பெரியதனத்தருடையவும் காரியதரிசியுடையவும் உத்தரவின்றி வெளியூர்க்குச் செல்லலாகாது. வேண்டும்போது எவ்வித ப்ரயோஜநத்திற்கும் இவர்கள் காலதாமஸமின்றி ஆயத்தமாயிருக்கவேண்டும். நம்மில

த்தர்களின் க்ருஹங்களில் நடக்கும் சுபாசுபங்களில் மரியாதைகள் நடத்தித் தீரமளவும், சபையில் நின்று பெரியதனத்தரால் (அவரில் லாதகாலத்தில் ஸபையில் வந்திருக்கும் அத்தியூர்களாலும் ப்ராமத் தலிவர்களாலும்) கொடுக்கப்படும் கட்டளைகளின்படி இவர்கள் நடந்து கொள்ளவேண்டும்.

29. க்ராமத்தொழிலாளர்களால் கோடும் எவ்வித தப்புகளும் ருசுப்படுமாகில், தப்பொன்றுக்குத் தக்கபடி ரூபாய் ஒன்றுக்கு அதிகப் படாமல் **காரியதரிசி** அபராதம் விதிக்கவும், இத்தொகைக்கு மேற் படும் அபராதங்களுக்கு நிர்வாஹஸபையார் அனுமதியைப்பெற்று விதி த்து அவர்களுடைய க்ராம ஸ்வதந்த்ரத்தில் வசூல்செய்து நிர்வாஹ ஸபையின் **வரவுசெலவுகணக்கில்** பதிவு செய்விக்கவும் வேண்டும். இவர்களே கீக்குவதாயிருந்தாலும், அல்லது இவர்களுக்குப் பதில் வேறு ஆள்களே நியமிப்பதாயிருந்தாலும், நிர்வாஹஸபையாரின் அனு மதியைப்பெற்று நியமிக்கவேண்டும்.

30. க்ராமப்பிரிவுகளுக்குள் நியமகமாகும் க்ராமத்தொழிலாள கள், அவ்வவ் **க்ராமத்தலைவர்** அதிகாரத்திற் தட்பட்டிருக்கவேண் டும். பிரயோஜனதிகளில் இவர்களின் உதவியை கோரும் க்ராமகர்ணா வகள், தங்கள் க்ராமத்தலைவர்மூகே பெற்றுக்கொள்ளவேண்டும். இத்த க்ராமத்தொழிலாளர் பிரயோஜனதிகளில் வேண்டிய அனு வல்களைத் திருத்தமாய்ச் செய்வார்களாயின், 24 - வது நிபந்தனையில் மூன்றாவதையும் ஸ்வதந்த்ரத் தொகையையும் இவர்கள் பெற்று வர க்ராமத்தலைவர்கள் கண்ணோக்கம வைக்கவேண்டும். இவர்களால் கோடும் தப்புகளுக்குத் தக்கபடி அபராதம் விதித்து வசூலாகும் தொ கைகளையும், தனது க்ராம எல்லைக்குள் நடக்கும் விவாஹங்களில் விவாஹகல்கம் ரூபாய் 1 - க்கு அணு 8 - ஆகவும், வருடவிராளம் அணு 12 - க்கு அணு 6 - ஆகவும், ப்ரதி குடும்பத்தாரும் அதிகாரத்தை அநுஸரித்து வருடம் முடிவதற்குமுன் வசூல்செய்து, தனது க்ராம வரவுசெலவு கணக்கில் பதித்த 6 - மாதத்திற் கோர்முறை ஓர் விவரக்கணக்கு லித்தஞ்செய்து, ப்ரதி தெலுங்கு ஜப்பசி மாதங் களில் 5 - தேதிக்குள்ளாக நிர்வாஹஸபையாருக்கு அனுப்பிவரவேண் டும்.

## இரண்டாவது ப்ரகாரம்.

## கூட்டநிர்ணய விதிகள்.

31. யதுவம்சஸ்தர்களின் நிர்வாஹஸபையின் உத்தியோகசாலை, சென்னை பெத்துநாய்க்கன்பேட்டை ஆனகெவுனிக்கடுத்த ஐயாமுதலி வீதி 10-வது கதவிலக்கமுள்ள ம-ரா-ரா-ஸ்ரீ காரியதரிசி கோ. முனிசாமிப்பிள்ளை அவர்கள் க்ருஹத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது.

32. ஸம்மனத்தர்கள் நிர்வாஹஸபையாருக்கு எழுதும் எவ்வித விண்ணப்பங்களும் காரியதரிசிக் கனுப்பவேண்டும். அவர் அவைகளைப் பார்வையிட்டு, அவசரமில்லா விவகாரங்களை நிர்வாஹஸபையில் கொண்டுவரவும், தீர்மானவைகளை விசேஷ நிர்வாஹஸபையிலாவது அல்லது சுற்று விளம்பரப் பத்திரிகை மூலமாவது தனது அபிப்ராயத்தோடு அத்தியக்ஷர்களுக்கு அனுப்பி கூடிய சீக்கிரத்தில் விண்ணப்பதாரருக்கு பதிலளித்து வரவும் வேண்டும்.

33. நிர்வாஹஸபையிலும், விசேஷநிர்வாஹஸபையிலும் அத்தியக்ஷர்களுக்கு குஜ்ஜாயமில்லை. சேர்ந்து, இனத்தின் விவகாரங்களை ஸ்பஷ்டபூர்வமாய் சீர்தூக்கிச் சபையின் பெரும்பாலருள் உதிக்கும் அபிப்ராயப்படி தீர்ப்புசெய்து வரவேண்டும். இவர்களால் இப்படி தீர்மானிப்பவைகள் யாவும் ஸம்மனத்தரால் ஒப்புக்கொள்ளத் தகுந்தவைகளாகவே பாவிக்கவேண்டும்.

34. நிர்வாஹஸபையாராலும் க்ராமத் தலைவர்களாலும் அளிக்கப்படும் தீர்ப்புகள் ஸம் ஸம்சனத்துக்கு நியாயமற்றவையெனப் புலப்படுமாயில், அப்படிப்பட்டவைகளின் விஷயமாய் 27-வது நிபந்தனையில் லியற்றியதுபோல் வாதிகள் ஓர் விசேஷமஹாஸபை சேர்ப்பித்து, அதில் அவர்களின் குறைகளை நியாயவாயிலாகக் காட்டி அம் மஹாஸபையில் பெரும்பாலோர் அளிக்கும் தீர்ப்பை அங்கீகரித்து நடத்துகொள்ளவேண்டும்.

35. காரியதரிசி தவறாமல் ப்ரதி தமிழ்மீ 15 தேதிக்குள் நிர்வாஹஸபை சேர்ப்பித்து, மாதவாரியில்வரும் கர்ச்சுவைகளின் காரியாதிகளை ஒழுங்குபடுத்தவும், அவைகளில் முக்கியமான அம்சங்களை வருடாந்தரம் கூடும் மஹாஸபையில் ஜர்ஜிதம் பெற்றுக்கொள்ளவும் வேண்டும்.

36. காரியதரிசி விவகாரங்களை அனுஷ்டித்து ஆவசியகமாய் நேரிடும்போது, பெரியனத்த ரணுமதியைப்பெற்று விசேஷநிர்வாஹ சபையையும் நிர்வாஹசபையாரின் அனுமதியைப்பெற்று விசேஷமஹாஸபையையும் சேர்ப்பிக்க அதிகாரமுண்டு.

37. எக்காலத்திலாவது கம்மினத்தார்கள் விசேஷமஹாஸபை சேர்ப்பிக்கக்கோரும் பக்ஷத்தில், காரணத்தைக்காட்டி, இவ்வுத்தியோகாஸ்தர்களின் கட்டேட்டில் வைத்திருக்கும் கம்மினத்தார்களின் தீர்மானிப்பட்டியிற்கண்ட இச்சென்னை நகரவாசிகளின் மொத்தத்தொகையில் 5-ல் ஓர் பங்கான ஸங்க்யைக்குக் குறையாமல் கையொப்பமிட்டு, 24-வது நிபந்தனையில் கண்ட கட்டணத்துடன் விண்ணப்பமனுப்பவேண்டும். அதைப்பெற்ற 15-தினத்திற்குள் நிர்வாஹசபையாரின் அனுமதியைப்பெற்றுக் காரியதரிசி விசேஷமஹாஸபை கூட்டவேண்டும்.

38. கம்குலஸ்தரால் குலதர்மங்களுக்கு நேரிடும் எவ்வித கஷ்டத்தையும், இவர்களுள் உதிக்கும் இனக்கட்டுக்கொவ்வா நடவடிக்கைகளையும், வில்லங்க விவகாரங்களையும், அப்போதைக்கப்போதே மஹாஸபையாரின் அறிக்கைக்குக் கொண்டுவந்து, அவர்களின் அபிப்ராயப்படி நடத்திவரவேண்டுமாதலால், இவ்விஷயமாய்க் காரியதரிசி வெளியிடும் விளம்பரங்களைப்பெறும் கம்குலஸ்தர்கள் ஒவ்வொருவரும் அவைகளில் நிர்ணயித்தகாலப்படி ஸபைக்குத் தவறாமல் பிரதியுத்தரஞ்செய்து ஸபைகலையுமளவும் வீற்றிருந்து அவ்விஷயங்களும் [illegible] கவனித்துத் தங்கள் அபிப்ராயத்தை வெளியிட்டு முடிவுகட்டவேண்டும்.

39. மஹாஸபையிலும் விசேஷமஹாஸபையிலும் வரும் கம்மினத்தார்களின் எண் 30-க்குக் குறைவுபடாமலிருப்பின், காரியதரிசி தனது விளம்பரப்படி அச்சபையில் அன்று நடத்தவேண்டிய அம்சங்களை விவரித்துரைத்துச் சிக்கறவாசிகளை வெகுஜன அபிப்ராயப்படி நடத்திவருகட்டி, அச்சபையினர் கையொப்பம் பெற்றபின் அன்று நடத்திய விருத்தாந்தங்களை ஆவச்யகமாயின் ப்ரசுரித்து கம்மினத்தாருள் பரவச்செய்யவேண்டும். விளம்பரங்களிற்கூறிய அம்சங்கள்தவிர மற்றெவ்வித சங்கதிகளையும் அம்மஹாஸபையில் கம்மினத்தார்கள் வாதித்துக் காலஹரணஞ் செய்யக் காரியதரிசி எவருக்கும் இடந்தராமலிருக்கவேண்டும்.

40. நீர்வாஹஸ்பையிலும், விசேஷநீர்வாஹ ஸ்பையிலும் மஹாஸ்பையிலும் விசேஷமஹாஸ்பையிலும் க்ராமஸ்பைகளிலும் விவகாரங்களின் விஷயமாய் முடிவுபெறும் பிரபஞ்சத்தாரின் தீர்ப்புகளின் அபிப்ராய பேதாபேதத்தின் ஸங்க்யை ஸமமாய்த்திரளும் பக்ஷத்தில், அன்றுகூடுஞ்சபைக்குச் சபைத்தலைவராக நியமிக்கப்படுமவர் இரண்டாவது அபிப்ராயம் கொடுக்க பாத்தியதை யுடையவராயிருக்கவேண்டும்.

41. மேற்கண்டஸபைகளில் கூடியிருக்கும் கம்மினத்தர்கள், எவ்விதகாரணத்தைப்பற்றியாவது கோபங்கொண்டு, கூச்சலிட்டும் கடுஞ்சொற்களை உபயோகித்தும் இனத்தர்களைப் பரிபவப்படுத்தலாகாது.

42. க்ராமநிவாஸிகளுள் உதிக்கும் எவ்வித விகாரங்களையும் பந்துக்கள் முன்னிலையில் ஒருங்குசேர்த்த விரும்புவோர், லிகிதமூலமாய்க் காரணத்தை விவரித்து க்ராமாட்டணம் அணு 14 - யுடன் தங்கள் க்ராமத்தலைவருக்கு அனுப்பவேண்டும். இவ்விண்ணப்பத்தைப் பெற்ற க்ராமத்தலைவர் 8 - தினத்திற்குள் தனது க்ராமநிவாஸிகளின் ஓர் ஸபைநிரட்டி அவர்கள் முன்னிலையில் சேர்த்துக்கி, வெகுஜனாபிப்ராயப்படி தீர்ப்பளித்து, இதுவிஷயமாய் ஏற்படும் வ்ருத்தாந்தத்தில் ஸபையார் கையொப்பத்தைப் பெற்று அதின் ப்ரதியொன்றை அப்போதைக்கப்போது நீர்வாஹலைக் கனுப்பவேண்டும்.

43. க்ராமத்தலைவர்கள் கூட்டும் ஸபைகளுக்கு அவ்வவ் க்ராம நிவாஸிகளினவரும் தவறாமல் விஜயஞ்செய்து, அன்று நடத்தவேண்டுந் தேஸித்த விவகாரத்தைமாத்திரம் நியாயவாயிலாக வாதித்து 10 - பெயர்களுக்குக் குறையாமலிருந்து முடிவுகட்டி, கூடிய சீக்ரத்தில் ஸபை கலைக்கவேண்டும். ஸபைகளில் அநாவச்யகமான ஸங்கதிகளைப் பேசி காலஹரணம் செய்யாமலிருக்கவும், இனத்தர்கள் எக்காரணத்தினலும் கடுஞ்சொற்களை ப்ரயோகிக்காமலிருக்கவும். க்ராமத்தலைவர் எச்சரிப்புடனிருக்கவேண்டும்.

44. மாதாந்தரம் நடக்கும் நீர்வாஹஸ்பைக்குத் தொடர்ச்சியாய் 4 ஆவர்த்தி வராமல் நிற்கும் அத்தியக்ஷர்கள் ஸ்தானியதரிசிக்குத் தகுந்த காரணத்தைக் காட்டத்தவறினால், இவர் விஷயத்தில் மற்ற அத்தியக்ஷர்களில் பெரும்பாலர் கொடுக்கும் அபிப்ராயப்படி நடத்தவேண்டும்.

---

மூன்றவது பிரகரணம்.

## இல்வாழ்க்கையின் தருமவிதிகள்.

45. பிரதிகுடும்பத்தரும் தம் பெரியதனக்கார ரிடத்திலும், க்ராமத்தலைவர்களிடத்திலும், வணக்கத்தையும் இணக்கத்தையும் செலுத்திவருவதில் அதிக லக்ஷமுள்ளவர்களா யிருக்கவேண்டும். தம் குலஸ்தர்களுக்குள் உதிக்கும் எவ்வித விவாதங்களையும் பெரியதனத்தர் முன்னிலையிலும் அவ்வவ் க்ராமத்தலைவர் முன்னிலையிலும் பரிஹரித்துக்கொள்ளுதல் சிறப்பாதலால், குல விவகாரங்களைப் பெரியதனத்தாைக்கொண்டும் அவ்வவ் க்ராமத்தலைவனாைக் கொண்டும் பக்ஷக்கள் முன்னிலையில் தீர்ப்புசெய்துகொள்ளுதல் குலஸ்தரது ப்ரதம கடமையாக இருக்கவேண்டும்.

46. குலாசாரத்தொழிலின் ஜீவகபிருத்தியே யதுவம்சஸ்தருள் சிறந்ததெனவும், நம்குலஸ்தர்களில் உதிக்கும் பிள்ளைகளுக்கு ப்ரதமத்தில் முக்யமாய் தமிழ்ப்பாஷையில் கூடியவரையிலும் கற்பயிற்சி செய்வித்துப் பின்னர் எப்பாஷையையாவது கற்பிக்கவேண்டுவதே நீதியெனவும் எண்ணவேண்டும்.

47. நம்குலத்தில் உதிக்கும் புதல்வர்களையும் புதல்விகளையும் தர்ப்பயிர்ச்சிக்கு இடங்கொடாதோம்பினு லொழுக்கம் பற்றுகுலத்தில் பிறந்த புதல்விகள் புகுந்தகுலத்திற்கும் பழிப்புவாராது நிற்கமாட்டாதாகையால், இப்பழி தங்களைச் சேருமென்பதைத் தாய்தந்தைகள் கவனித்து கன்னிகைகளை நடத்தலே ஈன்றதற்கு இயன்ற தருமமென் றறிந்துகொள்ளவேண்டும்.

48. குலக்குடிவாழ்க்கையில் பதியும் பத்தியும் ஒன்றாட்டு வாழ்தலே குலத்தின் ப்ரதமதருமம்; ஆதலால் ஸ்திரிகள் எவ்விதகாரணத்தாலும் [illegible]மாய்ப் பேசலாகாது. பேசில், குலத்திற்கு நீங்கா இழுக்கு ஸம்பவிக்குமென்பதை கவனித்து நடக்கவேண்டும்.

49. உறவின்முறையாரல்லாத ஸம்பந்தம் வம்சஸ்தர்களினின்றும் பிரிக்கச்செய்யுமாதலால் இக்களங்கத்தை அடைத்த குடும்பத்தாரும் அதனை அணுகி நடத்திய இனத்தாரும் ஜாதிக்குப் புறம்பினர்க

ளாகி தேர்ச்சியாய் நிர்ணயிக்கப்படுவார்களென்பதை நம் குலஸ்தர்கள் கவனித்து நடத்தலே குலதருமத்திற்கிசைந்த அழகாகும்.

50. இக்குலகாயத்தின் கட்டுத்திட்டங்களுக்கு இணங்கிய நம் இனத்தரின் இல்லங்களில் நடத்தும் சுபாசுபகாரியங்களுக்கு வரவழைக்கப்பட்ட ப்ரதி குடும்பத்தினருள் யாரேனும் ஒருவர் கட்டாயமாய்ச் சென்று இல்லத்தினரைக் கௌரவப்படுத்துவது நம் ஒவ்வொருவருடைய முக்கியமான கடமையாக இருக்கவேண்டும். இவ்வாறு நடப்போமாகில், பிரயோஜனங்களில் நிகழும் நம் சமூகத்தர்களின் காரிய ப்ரயோஜகர்த்தர்களுக்கும் அவர்களது குடும்பத்தினர்களுக்கும் மிக்க மனக்களிப்புண்டாக்குவதோடு, யாம் அடிக்கடி பிரயோஜனங்களில் ஒன்றுச் சந்தித்து வருவதில் நம் பாந்தவ்யக்கட்டு நிலைத்து ஒருவர்க்கொருவர் விசுவாஸமும் ஒருமைப்பாடும் அதிகரிக்குமென்பதை யாம் ஒவ்வொருவரும் கவனித்து நடந்திடுதல்வேண்டும்.

51. சென்னைகேசவநகர நிவாஸிகளாகிய நம்மினத்தர்கள் ஸம்பந்தாஸம்பந்தஞ்செய்ய நேரிடுங் காலங்களில், தகவல்கள் சரியானதென்றே ஸ்பஷ்டமாய்த் தெரிந்திருந்தபோதிலும், ஒழுங்காநத்திற்காக விவாஹமஹோத்ஸவம் நிறைவேற்றும் இல்லத்தார் நிர்வாஹஸபையிலிருந்து **B.** ரூபாவைப் பெற்றுத் தாம் செய்ய நிர்ணயித்த ஸம்பந்தத்தின் தகவல்களை விவரமாய் எழுதிக் காரியதரிசிமூலமாய்ப் **பெரியதனத்தார்** - வது நிபந்தனையில்கண்ட விவாஹ சுல்கம் வேத்ரதரன்கூலி ஸ்வீகரித்தலுடன் அனுப்பவேண்டும்.

52. இவ்விண்ணப்பத்தைப் பெற்ற **பெரியதனத்தார்,** நிர்வாஹ ஸபையில் விசாரஞ்செய்து ஸம்பந்தாலோசனைகளுக்கு **காரியதரிசியோடு** மிக்க சாக்ரதையுடன் ஒன்னுற்று, விண்ணப்பதாரர் செய்யும் ஸம்பந்தம் நம்மினக்கட்டின் வரம்பிற்குள் இருக்குமாயின் பெரியதனத்தாரது அபிப்ராயத்தைக் **காரியதரிசி C.** ரூபாவில் தொலைத்தபின், விண்ணப்பதாரர் செய்யும் ஸம்பந்தத்தை ஸம்ப்ரமமாய் நிறைவேற்றிக்கொள்ளவேண்டும்.

53. ப்ரதி க்ராமப்பிரிவின் நிவாஸிகளுள் ஸம்பந்தஞ்செய்ய நேரிடில், செய்யும் ஸம்பந்தத்தின் தகவல்களை விவரமாய் எழுதி 30-வது நிபந்தனையிற்கண்ட விவாஹசுல்கம் 24 - வது நிபந்தனையில் குறித்த

க்ஷேத்ரதரன்சூலி ஸ்வதந்த்ரம் இவற்றுடன் தங்கள்தங்கள் க்ராமத் [illegible] வருக்கு அனுப்பவேண்டும்; இதைப்பெற்ற க்ராமத்தலைவர், பெரியதனத்தர்களுமாய் சம்பந்தத்தினால் தகவல்களைத் தெளிவுபெற்ற பின், விண்ணப்பதாரருக்கு உத்தரவளித்து ப்ரயோஜனத்தை நிறை வேற்றிவைக்கவேண்டியது.

கவனிப்பு.—[illegible]யாம் பெரியதனத்தார் அபிப்ராயத்தைப்பெற்று ஸம்பந்தாலம்பந்தங்களை நடத்தி வருவோமாயின் குலாசாரதர்மத்திற்கு எப்போதும் எவ்வித பழிப்பும் அணுகாமலும் இனக்கட்டின் வரம்பு அழியாமலும் நம் இல்வாழ்க்கையின் க்ரேயஸ்ஸு நிரேதரே அபிவ்ருத்தியாகி வருமென்பதே உபஸனபயாரின் முக்கியகருத்து.

54. நம் குலஸ்தருள் விவாஹலாங்க்யங்களின்றிச் சேரும் கல்யாணிகளுக்கு உதிக்கும் புதல்வர்களோடு ஸம்பந்தாலம்பந்தஞ்செய்வதும், சுபாசுபங்களில் அவர்கள் உறவின்முறை பாராட்டி ஆசீர்வதிக்கும் எவ்வித மரியாதைகளை நம்மினத்தர் முன்னிலையில் பெற்றுக்கொள்வதும், குலவிவாத முதலியவைகளைப்பற்றிக் கூட்டும் ஸபைகளில் இவ்வகுப்பினரைச் சேர்ப்பதும், குலக்குடிவாழ்க்கைக்கு இழுக்கையும் தருமவிதிகளுக்கு விருத்தத்தையும் விளைக்கும் என்பதை, நம்மினத்தர் அறிந்து நடந்துகொள்ளவேண்டும். ஆனால், இக்களங்கமுடையாரை அவரவர்கள் ப்ரயோஜனங்களைக்கருதி வைத்துக் வேண்டுமாயின் அவர்களை ஸபையில் அன்னியர்களைப்போல உபசாரத்தில் ஆக்ஷேபம் செய்யாமல் விட்டுவிடுவதொன்றே செய்யவேண்டும்.

55. நம்மினத்தில் யாரேனும் நிக்ருஷ்டகாயத்தின் ஏற்பாடுகளை மீறி வேறு யாகவாதிகத்தை ஏற்படுத்தி அவ்வியக்கத்தகாத சரவழியிலாவது ஸம்பந்தாலம்பந்தஞ்செய்ய எத்தனித்தாலும், அல்லது நம்மினத்தர்களுக் சலிவிக்காமல் செய்து முடித்தாலும், காலதாமதமின்றி வழக்கப்படி [illegible]ர் விசேஷமஹாஸபை சேர்த்து நடந்தவருத்தாந்தத்தை ஸபையில் தெரிவித்து அதில் நிரளும் பெரும்பாலரின் அபிப்ராயப்படி நடத்தவேண்டும். மஹாஸபையினரால் சுற்றஞ்சாட்டி நீக்கப்படும் நம்மினத்தர், நம்முள்ளம்ம தியதிகளின் வரம்பைக் கடந்து புறப்பட்டவரென்றே மதிக்கப்படும்.

56. சம்ஸமூஹத்தினின்று நிக்ரஹிக்கப்பட்ட குலஸ்தர்கள் மஹா ஸபையாரின் கேள்விகளுக்கு திருப்திகரமான நியாயத்தை எடுத்துக் காட்டி அம்மதல் செய்யுமளவும், நம் இல்லங்களில் நடக்கும் சுபா சுபங்களுக்கு அவர்களை வரவழைக்காமலும் அவரது ஆசீர்வாதம் முதலான மரியாதைகளை [illegible] ளால் அனுப்பப் படும் எவ்வித விளம்பரம் தாம்பூலம் முதலியவைகளைக் கைக்கொள் ளாமலும், அவரது க்ருஹத்தில் நேரிடும் எவ்வித சுப சுப ப்ரயோஜ னத்திற்கு [illegible] தொரு குடும்பத்தைச்சார்ந்த ஆண்பால ரேனும் பெண்பாலரேனும் சென்று அவரையாவது அல்லது அவரது க்ருஹத்தில் வசிக்கும் குடும்பத்தினரையாவது எவ்வித மரியாதைக ளானும் கௌரவிக்காமலும், இக்களங்கத்தாரை ப்ரயோஜனங்களில் வரவழைத் தபசரிக்கும் இனத்தார்களின் வீட்டின் சுபாசுபங்களுக்கு [illegible] போகாமலும், இவர்களை நமது சுபாசுபங்களுக்கு வரவழைக்காம லும் இருக்கவேண்டுமென்பதே. குலதர்மங்களுக்கு இயன்ற ஒழுங் கினைப் பாவித்து நடத்திகொள்ள வேண்டும்.

---

## நாலாவது ப்ரகரணம்.

## க்ராமஸபை தாம்பூலம் முதலான மரியாதைகளைப் பற்றிய விதிகள்.

57. நம் வம்சஸ்தர்களின் வசதிகளில் நடக்கும் எவ்வித ப்ரயோ ஜனங்களிலும் இனத்தார்கள் மனக்கலக்கம் நேரிடாவண்ணம் [illegible] தனந்தாவது க்ராமத்திலாவது ப்ரயோஜகர்களுடன் கல ந்து அக்காலத்தில் வந்திருக்கும் அவரவர்களின் ஆடையா பரணம் தாம்பூலம் முதலிய மரியாதைகளை விசை கரமப்படி நடப் பித்தல் [illegible] அச்சபையில் விளங்செய்திருக்கும் நம்வரம் பிற் குட்பட்ட பந்தங்களுடையவும் அன்னியர்களுடையவும் மரியா தைகளை [illegible] மயோசிதப்படி நடப்பிக்கவேண்டும்.

58. சுபாசுபங்களில் ஸபையிலுள்ள நம்மினத்தார்களும் மற்றவர் களும் நம்பந்துக்கள் இன்னின்ன க்ராமங்களில் வஸிக்கின்றார்களெ [illegible] திருக்கும் பொருட்டும் அலந்தர்ப்பத்தாரென்று ப்ரயோஜ தத்திற்கு வராமல் நின்ற மற்ற நம்மினத்தார்களை [illegible] ளிக்கும்பொ

ரூட்டும், க்ராமப்பெயர்களைச் சபையிற்கூறி அவ்வவ் க்ராம நிவாஸிக ளில் வத்திக்கும் யாதேனுஞ் சந்தேஹ, வராமல் நின்றவர்களுக்கு ப்ரதிநிதியப் பாலிக்க, கந்தபுஷ்ப தாம்பூலத்தட்டால் உபசரித்து வந்த மூதாதைகளின் கோட்பாட்டை [illegible] தனுஸரித் தொ ழுகவேண்டுவதே [illegible]

59. ஆகையால், [illegible] புரிக் கோட்டைக்கு வடக்கு மேற்கு திக்கு இப்போது பாரிசங்களைச்சுற்றி 12 மயில் விஸ்தீர்ணத்தில் குள்ளிருக்கும் 38 மூங்கிய லூர்களையும் தனித்தனி க்ராமமாகப் பாவி த்து உபசரித்து வருவோமாகில், இல்லத்தினர்களுக்கு அதி வ்ரய மும், இனத்தரிடம் அருவருப்பும், கடத்தவேண்டிய மற்ற க்ருத்தி யங்களுக்கு ஆடங்கமும் நேரிடுவதோடு, பெரியதனத்தருக்கு விசேஷ ச்ரமமும், மரியாதைகள் நடத்துகையில் ஏதேனும் லோபத்வம் நேரி டின் ஸபையிலுள்ள கம்முலஸ்தர்களுக்கு மனக்கலக்கமும், இதனு விபரீத மாத்சரியமும் சேரிடாமற் போகாதென்பதற்கு இதுவரையி லும் நமக்குண்டான அநுபவமே போதுமான நிதர்சனமாயிருக் கின்றது.

60. ஆகையால், இத்தகைய இடைபூறுகளைச் சுருக்கும்பொரு ட்டு, மேற்கூறிய கோட்டைச்சுற்றிய 12 மயில் விஸ்தீர்ண எல் லையைப் பகிர்ந்து இதனடியில் கூறியவண்ணம் 8 க்ராமங்களுக் கதி கப்படாமல் நூதக க்ராமப் பிரிவுகளாக்கி, ஒவ்வொன்றிற்கும் நம் மா தவகுல ரக்ஷகரான ஸ்ரீநந்தகோபன் நாமதேயத்தையே மங்களாசா ஸனஞ்செய்து, இப்பிரிவுகளிலடங்கிய பலபேட்டைகளையும் ஊர்களை யும் குக்ராமங்களெனப் பாவிக்கவேண்டும்.

61. நம் வம்ஸஸ்தரதுக்ருஹங்களில் நடக்கும் ப்ரதி சுபாசுப ப்ர ஸ்துதங்களில், மேற்கண்ட 8 நூதக க்ராமப்பிரிவுகளுக்கு முதன்மை யான ஸ்ரீ கண்ணபிரான் திருநாமத்தினால் [illegible] க்ராம பெயர்களை கொண்டு [illegible] இவையிற்குறித்த க்ராமவரிசைப்பட்டிற்கண்ட க்ர மப்படி க்ராமத்தினர்களையும் கம்மூன்னூர்களின் ஏற்பாட்டின்படி கந்தபுஷ்ப தாம்பூலத்தட்டால் உபசரித்து கௌரவிக்க வேண்டும். இவ்வாறு உபசரித்துவருதலிலேயே அவ்வவ் க்ராமப் பிரிவிலுட்பட்ட குக்ராம நிவாஸிகளனைவரையும் தாம்பூலத்தட்டுகளால் உபசரித் ததுபோற் கம்பிரதர்கள் பாவித்து அங்கீகரிக்கவேண்டும்.

# க்ராமக்ரம வரிசைப்பட்டி.

தலைக்ராமம்.

1. சென்னகேசவநல்லூர்.

குக்ராமங்கள்.

பெத்துராயக்கல்பட்டை.
மூத்தியாலுப்பேட்டை.

---

திருமலை.

2. ஸ்ரீமாதவனநல்லூர்.

குக்ராமங்கள்.

இராயப்பேட்டை.
வினயகன்பேட்டை.
திருவேணும்பேட்டை.
தேனும்பேட்டை.
மயிலை.
ஆழ்வார்பேட்டை.
மீர்சாயபுபேட்டை.

---

திருஅல்லிக்கேணி.

3. ஆயர்பாடி.

குக்ராமங்கள்.

திருஅல்லிக்கேணி.
சேப்பாக்கம்.
திருவெட்டீச்வராபேட்டை.
புதுப்பாக்கம்.
நரசிங்கபுரம்.
கோமளீச்வரன்கோயில்.
சித்தாதரிப்பேட்டை.
நுங்கம்பாக்கம்.

---

பரங்கிமலை.

4. [illegible]

குக்ராமங்கள்.

பரங்கிமலை.
பல்லாவரம்.
சைதாப்பேட்டை.
கோடம்பாக்கம்.

---

கொட்டிவாக்கம்.

5. கேசவபுரம்.

குக்ராமங்கள்.

[illegible]கம்.
திருவான்மியூர்.
காரப்பாக்கம்.

---

சூளை.

6. காஞ்சீபுரீத்தனபுரம்.

குக்ராமங்கள்.

சூளை.
நாராயணபாக்கியம்.
பரணைபாக்கம்.
பெருமாள்பேட்டை.
கனையாங்குட்டை.
பட்டாளம்.
பெரியமெட்டு.
அயனவரம்.
வீரண்டதோட்டம்.
பெரளூர்.

---

வண்ணாரப்பேட்டை.

7. பக்தவத்ஸலர்பேட்டை.

குக்ராமங்கள்.

வண்ணாரப்பேட்டை.
சஞ்சீவிராயன்பேட்டை.

---

காலாட்டிப்பேட்டை.

8. வாதாராஜர்பேட்டை.

குக்ராமங்கள்.

காலாட்டிப்பேட்டை
திருவொற்றியூர்.

---

62. இவ்வாறு பிரிக்கப்பட்ட 8 தூதன க்ராமப்பிரிவிற்குள் சென்னிகேசவநகரம் நீங்கலாக மற்றக்ராமங்களுக்குப் பொறுப்பாய் [illegible] க்ராமத்தலை[illegible]ப்பட்டிருத்தல் மிக அவசியமாதலால், ஒவ்வொரு க்ராமப்பிரிவின் எல்லைக்குள் வஸிக்கும் தம் குடிகளைக் கொண்டு ஓர் க்ராமத்தலைவரை 22-வது நிபந்தனையில் விவரித்த வண்ணம் தங்களுக்குள் கட்டாயமாய் நியமித்துக்கொள்ளவேண்டும்.

63. நிர்வாஹஸபையாரால் அங்கீகரிக்கப்பட்ட ப்ரதி க்ராமத் தலைவர், தமது எல்லைக்குள் வஸிக்கும் [illegible] சுபாசுப ப்ரஸ்துதங்களில் தவறுமல், முன்னிட்டுச் சபையில் பெரியதனத்தர் நடன் ஒத்திருந்து, க்ராமஸபை தாம்பூலம் முதலான மரியாதைகள் 66-வது நிபந்தனைப்படி நடப்பித்து, ஸபையினைக் கௌரவித்து வரவேண்டும். தமது க்ராமவாஸிகளுள் உதிக்கும் வில்லங்கம் முதலான விவகாரங்களைத் தமது க்ராமவாஸிகள் முன்னிலையில் நிகழ்ற விசாரித்துச் சபையார் அபிப்ராயப்படி நிர்ப்பளித்து ஏற்படும் தீர்ப்பத்தின் ப்ரதியொன்றை நிர்வாஹஸபையாருக்கனுப்பி ஸஹி தம் பெற்றுக்கொள்ளவேண்டும்.

64. 61-வது நிபந்தனையிற் கூறிய 8 க்ராமப்பிரிவுகளுக்குள் சென்னிகேசவநகரம் நீங்கலாக மற்ற 7-க்ராமங்களில் நடக்கும் எவ்வித சுபாசுபங்களில் விஜயஞ்செய்யும் பெரியதனத்தரிடம் (இவரில்லாத காலங்களில் அத்தியக்ஷர், இவர்களில்லாவிடில் சென்னி கேசவநகரவாஸிகளிலாரேனும் ஒருவரிடம்) இல்லத்தார் க்ராமஸபை மரியாதைத்தட்டு ஒன்றை ப்ரதமத்தில் வைத்து உபசரிக்கவேண்டும். இவ்வாறு உபசரிக்கப்பட்ட க்ராமஸபை மரியாதைத்தட்டைப் பெரியதனத்தர் அங்கீகரித்து, அவ்வக் க்ராமத்தலைவரிடம் (இவரில்லாத காலங்களில் அவ்வூர் க்ராமவாஸிகளிலாரேனும் ஒருவரிடம்) கொடுத்து 61-வது நிபந்தனையிற் காட்டிய வரிசைக்ரமப்படி க்ராமஸபை முதலான மரியாதைகள் நடத்தி, ஸபையினரைக் கௌரவிக்கப் பார்த்துவரவேண்டும்.

65. சென்னிகேசவநகர நிவாஸிகளின் இல்லங்களில் நடக்கும் 66-வது நிபந்தனையில் விவரித்த ப்ரயோஜநங்களில், பெரியதனத்தரிடம் (இவரில்லாவிடில் அத்தியக்ஷர், இவர்களில்லாத காலங்களில் அவ்வூர் நிவாஸிகளில் யாரேனும் ஒருவரிடம்) இல்லத்தார் க்ராமஸபை தாம்பூல மரியாதைத்தட்டுவைத் துபசரித்தபின், இவர் ஸபை

யில் இதனடியில் கூறியவண்ணம் தாமே முன்னிட்டு தாம்பூலமும் மரியாதை நடத்தி ஸபையினரைக் கௌரவித்து வரவேண்டும்.

66. ப்ரதி க்ராமப்ரிவுகளுக்குள் வசிக்கும் நம்முடைய க்ருஹங்களில் நடத்தப்படும்,

1. அக்ஷராப்யாஸ காலத்திலும்.
2. விவாஹமுகூர்த்தகாலங்களிலும்.
3. கங்கணவிலர்ஜநாதிகளிலும்.
4. மருவுவிலக்கங்களிலும்.
5. ஹோமசாந்தி முகூர்த்தங்களிலும்.
6. ஸீமந்தமுகூர்த்தங்களிலும்.
7. ஸஞ்சயநாதிகளிலும்.
8. சுபஸ்வீகாரஞ்திகளிலும்

இவை முதலான விசேஷ ப்ரயோஜனதிகளிலும் ப்ரயோஜனதிசடங்குகளும் ஆசீர்வாத முதலான மரியாதைகளும் நடத்தபின், அங்கு வந்திருக்கும் நம்குலஸ்தர்க ளனைவரையும் ஸபையில் வீற்றிருக்கச்செய்து பெரியகனத்தர் அவ்வூர் க்ராமத்தலைவரைக்கொண்டு ஷெ க்ராம ஸபை மரியாதைத்தட்டிலிருந்து அப்போது ஸபையில் விஜயஞ் செய்திருக்கும் ப்ரம்மகுலத்தோராகிய யாவத் ப்ரஹ்மணர்களுக்கும் ப்ரதமத்தில் கந்தர்வ்ப தாம்பூலம் வழங்கி, பின்னர்,

க்ஷத்ரியர்கள்
நாட்டார்கள்
தேசாதிகள்

முதலான இதர வகுப்பினருள் ஒவ்வொருவரை கந்தருவ்ப தட்டுகளா லுபசரித்து, அன்று ப்ரயோஜனத்தில் வஸ்த்ரம் பூஷணம் தானியம் இவைகளால் ஆசீர்வாதம் முதலான மரியாதைகள் நடத்திய அவ்வீட்டின்

சம்பந்திகளையும்
பந்துக்களையும்
ஸ்நேஹிதர்களையும்

வரிசைக்ரமப்படி கந்தருவ்ப தாம்பூலத் தட்டுகளால் உபசரித்த பின், 16 - வது நிபந்தனையிற் சொன்னபடி க்ராம வரிசைப்பட்டியிற்கண்ட வரிசைக்ரமப்படி

1. சென்னகேசவநகரம்.
2. ஸ்ரீமாதவனகூர்.
3. ஆயர்பாடி.
4. கோவர்தனகிரி.
5. கோபிநகரபுரம்.
6. காளிங்கநர்த்தனபுரம்.
7. பக்தவத்ஸலர்பேட்டை.
8. வரதராஜர்பேட்டை.

ஆகிய இவ்வெட்டு நூதனக்ராமப்பிரிவுகளுக்குரிய க்ராமத்தட்டு களை அவ்வவ் க்ராமத்தலைவர்கிட்டம் (அவரில்லாதகாலங்களில் அவ்வவ் க்ராமநிர்வாஹிகளிலாரேனு மொருவரிடம்) வைத்து, கத்தபுஷ்பத்தாலு பசரித்து முடித்தபின், மேற்கண்ட எல்லைக்குமேற்பட்ட எல்லா காடுக களிலும் வஸிக்கும் மற்ற நம்மினத்தார்களையும் அச்சபையில் வரவழைக் கும்பொருட்டு,

## நாட்டுமரியாதைத்தட்டு

ஒன்றைப்பொதுப்படவைத்து, அப்போது காட்டிலிருக்கு ப்ர யோஜகர்த்தாவின் பந்துக்களி லாரேனும் வந்திருப்பின், அவர்களை ஒருவரிடஞ்செலுத்தி, கத்தபுஷ்பத்தாலுபசரித்துக்கௌரவித்தபின்,

## ஸபையிலுள்ளஎல்லாவர்ணத்தருக்கும்

ஏகரூபமாய் கத்தபுஷ்பதாம்பூலம் வழங்கிக் கௌரவித்து, வேத்ரதாரனைக்கொண்டு ஸபையிலுள்ள யாவனாயும்தாம்பூலமரியா தை கடந்தார்? என ஸபையில் 3-தடவை கேட்டுத்தெளிக்தபின்,

## க்ராமத்தொழிலாளர்களுக்கும்

தாம்பூலமீந்து ஸபையைக் கலைக்கவேண்டும்.

67. மேல்விவரித்த நூதநஸ்பாட்டின் தாம்பூலமரியாதைகள் தவிர இவ்வளாயிலும் பிரயோஜகர்களில் கவிஸ்வஸ்தர்கள் மற்ற யோகியுபயோகத்திலுள்ள எவ்வித தாம்பூலமரியாதைகளையும் பூர்ண மாய் ரத்துசெய்துவிடவேண்டும்.

---

* காடென்பது - இச்சென்னையைச்சுற்றி 2-மயில்விஸ்தீர்ணத் திற்கு வெளிப்பட்ட பரதகண்டத்திலுள்ள எல்லா காடுகளென்ப தேயாம்.

68. சுபாசுப ப்ரஸ்துதக்களுக்குவரும் கம்மஸ்சல்தார்கள், இவர் தரோடுஒத்துச் சபையில் வீற்றிருந்து தாம்பூல மரியாதை கட்டப்பித்துக்கொள்ளவேண்டும். இல்லாதில்லாமல் ஸபையில் சேர்ந்து இனத்தாரேனும் ஸபைலிலுத்தின் தனக்குத் தாம்பூலமரியாதை கட்டாமல் தன்னை அவமதித்ததாய் இல்லத்தாரிதாவது பெரியதனத்தார் அல்லது க்ராமத்தலைவர் பிதாவது சாத்துங்குறைபயனற்றதென கிர்வாஹஸபையார் மதிக்கவேண்டும்.

69. கம்குலஸ்தருள் யாரேனும் பிரயோஜனங்களில் க்ராமஸ்தரை மரியாதைத்தட்டி லிருந்து தாம்பூலம் பெற்றுக்கொள்ளாமறுத்தாலும், அல்லது கம்மினத்தரோடி ஒத்திருந்து தாம்பூலமரியாதைபெறக்கூடாதென்றே எண்ணத்தோடி ஸ்பையைவிட்டு நீங்கினாலும், வெளிக்கட்டுக்கடங்கா அவரது துச்சடவடியை அட்டைசெய்து இவ்விஷயமாய் ஸபையில் எவ்வித சக்சரவும் சேரிடாவண்ணம் சீர்த்து மற்ற கம்மினத்தர்களைச் சட்டப்படி கத்தபுஷ்ப தாம்பூலத்தால் உபசரித்து ஸபைகலைக்கவேண்டும்.

70. பிரயோஜனங்களில் 68 - 69-வது நிபந்தனைகளில் கூறியவண்ணம் ஸபையில் வீற்றிருந்து தாம்பூலமரியாதை அங்கீகரியாமல் ஒதுங்கும் பக்ஷத்தில் அன்று ப்ரயோஜனத்தில் ஏதேனும் மரியாதை கட்டப்பட்டிருந்தால், அதை உடனே ஸபையர் மூன்னிலையில் இல்லத்தார் அவருக்குத் திருப்பி அவனைக் கைத்தாம்பூலம் முதலான எவ்விதமரியாதையாலும் உபசரிக்காமல் இருக்கவேண்டும். இவ்வேற்பாட்டிற்கு விரோதமாய் கட்டத்தும் இனத்தர்விஷயத்தை கிர்வாஹஸபையாரின் அறிக்கைக்குக் கொண்டுவரவேண்டும்.

---

## பொதுவிதிகள்.

---

71. இட்டுக்கட்டத்தில் உடன்படிய நிபந்தனைகள் யாவற்றுக்கும் சென்னையிலும் புறதேசத்திலும் வலிக்கும் கம் குலக்கட்டிற் குட்பட்ட இனத்தாயாவராலும் அதுஷ்டிக்கப்பட்டவைக ளாதலால், நம் இனக்கட்டின் விஷயமாய் கடத்திவரும் எவ்வித விவகாரங்களையும், உள்ளூர் வாலிகளுக்கு அப்போதைக்கப்போது அறிவித்து வருவதுபோலவே புறதேசவாலிகளாகிய கம்மினத்தாருக்கும் தபால் மூலமாய் அறி

பித்து வரவேண்டுவது காரியதரிசியின் முக்கிய கடமையாக இருக்க வேண்டும்.

72. ஆண்டுதோறும் ஒவ்வொரு திருச்சபை குருஸ்தருக்கும் ப்ரதி ஞ்ஞாபத்திலிருக்கும் ப்ரதமதினம் இலவசமாய்க் கொடுத்தும் மற்ற ப்ரதி வேண்டுமவர்களுக்கு 2 அணா விலைதரும் இதர ஜாதியாருக்கு 4 அணா விலைதரும் விற்பனைசெய்து க்ரயத்தை நிர்வாஹஸபையின் வரவுசெலவு கணக்கில் பதித்துவரவும் வேண்டும்.

73. அதுபோக ஸமயோசிதப்படி தேச்சால வர்த்தமானங்களை அனுஸரித்த வம்சக்கூட்டத்தார் முன்னிலையில் இன்னதிப்பாடலும் உபதேசத்தினகனி இதில் சேர்க்கவும், உள்ளவைகளை மாற்றவும், திருத்தவும் கூடும்.

## யதுவம்சஸ்தர்களின் குலகாயம்

ஸம்பூர்ணம்